கூடுதல் சார்பு நீதிமன்றம், தென்காசி

முன்னிலை : திரு.எஸ்.முருகவேல், B.A.B.L.,

செயலாளர், தென்காசி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு

கூடுதல் சார்பு நீதிபதி, தென்காசி(முழு பொ)

2026 ம் வருடம் ஏப்ரல் மாதம் 6 ஆம் நாள் திங்கள்கிழமை

**அசல் வழக்கு எண்.295/2019**

1. மு. அண்ணாத்துரை
2. அ. வேலுச்சாமி .. வாதிகள்

–எதிர்–

1. சிவசுப்பிரமணியன்
2, சுரேஷ்
3. அமுதா
4. வசந்தி
5. முத்தம்மாள்
6. துரை (இறப்பு)
7. ராஜம்மாள்
8. அண்ணாமலை
9. முத்துலட்சுமி
10. மல்லிகா
11. பாபு
12. பாலாஜி

(4,5 பிரதிவாதிகள் தங்களது பொது அதிகாரம் பெற்ற
முகவரான 3 ம் பிரதிவாதி மூலம்
(வைஷ 7,9,10 பிரதிவாதிகள் தங்களது பவர் ஏஜெண்டான அண்ணாத்துரை மூலம்)

..பிரதிவாதிகள்

இவ்வழக்கு இன்று என் முன்னர் விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் செல்வி.S. வனஜா அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.ராஜ் மகேந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், 6,8 பிரதிவாதிகள் ஒருதலைதரப்பாக்கப்பட்டும், 7,9,10 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.மாரிச்செல்வன் அவர்கள் முன்னிலையாகியும், 11,12 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.T. விஜயக்குமார் அவர்கள் முன்னிலையாகியும், வழக்குரை மற்றும் எதிர்வழக்குரை பரிசீலனை செய்து எழுவினாக்கள் வனையப்பட்ட நிலையில் தரப்பினர்களுக்குள் ஏற்பட்ட சமரச தீர்வை ஏற்று அதன்படி வழக்கில் தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்க உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்ட இடைநிலை விண்ணப்ப எண். 9/2026 அனுமதிக்கப்பட்டதன் அடிப்படையில் இந்நீதிமன்றம் வழங்கும்

<u>தீர்ப்புரை</u>

அ) இதன் 2 ம் தபசில் சொத்து வாதிகள் மற்றும் 6 முதல் 10 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்வதன் மூலம் இதன் 2 ம் தபசிலை வாதிகள் தங்களுக்காகவும் 6 முதல் 10 பிரதிவாதிகளுக்காகவும் வேண்டி அனுபவிப்பதை இந்த 1 முதல்

5 பிரதிவாதிகள் 2ம்தபசிலில் ஆக்கிரமித்து புழங்குவதன் மூலமாவது வேறு வகையிலாவது இடைஞ்சல் செய்யக்கூடாது என்று இன்ஜங்சன் உத்தரவிட கோரியும் மற்றும் வழக்கின் செலவு தொகை வாதிகளுக்கு 1 முதல் 5 பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்கும்படி உத்தரவிடக்கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்குரை மற்றும் எதிர்வழக்குரை பரிசீலனை செய்து கீழ்கண்ட எழு வினாக்கள் வனையப்பட்டன.

1. வாதி 2ம் தபசிலை தங்களுக்கும் 6 முதல் 10 பிரதிவாதிகளுக்கும் பாத்தியம் என கோரும் விளம்புகை பரிகாரம் கிடைக்கதக்கதா?
2. 2ம் தபசிலை பொறுத்து வாதிகள் கோரும் உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்க கூடியதா?
3. இதர பரிகாரங்கள் என்ன?

“ IA 9/2026 is allowed, the dispute between the parties compromised and the petition u/s 23 Rule 3 of cpc and allowed, as per terms of both parties permited to settled the suit dispute and compromise decree passed and the order passed in IA 9/2026 is part and parcel of the decree and no costs.”

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6 ஆம் நாள் இந்நீதிமன்றம் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,(முழு பொ)
தென்காசி

கூடுதல் சார்பு நீதிமன்றம்,
தென்காசி.
அசல் வழக்கு எண்.295/2019
நேரிய / வரைவு தீர்ப்புரை
நாள்–06.04.2026